# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 09 - நேரம்:30 நிமிடம்

## வினாப்பத்திரம்:புன்னை என்னும் தங்கை

**தயாரிப்பு : திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01.** மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**(அ)** விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளர் இசை கடுப்ப
வலம்புரி வான் கோடு நரலும் இலங்கு நீர்
துறைகெழு கொண்க நீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா உளவே.

**வினாத்தொகுதி:01**

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

(ii) பாடலின் பின்வரும் தொடர்களுக்கு பொருள் தருக.

- தீம்பால்
- நுவ்வை
- கோடு
- ஆயம்

(iii) தோழி பகற் குறியை மறுத்தற்குரிய காரணம் யாது?

**(12 புள்ளிகள்)**

**வினாத்தொகுதி:02**

(i) இப்பாடல் யாரால் யாருக்கு கூறப்பட்டதெனக்குறிப்பிடுக.

(ii) கையாளப்பட்ட அணி : உவமையணியினை எடுத்துக்காட்டுக.

(iii) தலைவியைச் சந்திப்பதிலுள்ள இடைஞ்சலை புலப்படுத்தும் தோழியின் மதிநுட்பம் இப்பாடலில் எவ்வாறு துலங்குகின்றது?

**(12 புள்ளிகள்)**

**<u>வினாத்தொகுதி:03</u>**

(i) பாடல் குறிப்பிடும் நெய்தல் நிலம் பற்றிய செய்திகள் யாவை?

(ii) இப்பாடல் வழியாக நாமறிந்து கொள்ள வேண்டியதும்,வலியுறுத்தப்படுவர்மான செய்தியக் யாவை?

(iii) தலைவி தொடர்பான நலனில் தோழியின் உரையாடல் மதிநுட்ப வகிபாகம் புலப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.

**(12 புள்ளிகள்)**

**<u>வினாத்தொகுதி:04</u>**

(i) இப்பாடல் வெளிப்படுத்தும் பேசு பொருள் யாதெனக்குறிப்பிடுக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- விருந்திற் பாணர்
- வான்
- இலங்குநீர்
- விளர்

(iii) இப்பாடல் புலப்படுத்தும் சங்ககால அகத்திணைப் பண்புகள் நான்கினை எடுத்துக்காட்டுக.

**(12 புள்ளிகள்)**

**<u>வினாத்தொகுதி:05</u>**

(i) செய்யுளில் இடம்பெறும் சிறப்புக்களையும் உத்திகளையும் எடுத்துக்காட்டுக.

(ii) தலைவியை ஒலியெழுப்பும் சங்காக குறிபிட்டதன் கருத்துநிலைபற்றி ஆராய்க.

(iii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- காழ்
- அகைய
- விளர்
- நரலும்

**(12 புள்ளிகள்)**